சென்னைக்கு சேரவேண்டிய ரூ. 8 கோடி விற்பனை வரி

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஓர் அணா | சென்னை: புரட்டாசி 14உ வியாழன் (30—9—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: புரட்டாசி 15உ வெள்ளி (1—10—54) | இதழ்: 93

பிற மாநிலங்களிலிருந்து ரூபாய் 500 கோடிக்கு அரிசி வாங்கினதில் பாக்கி

அதை வசூலிக்க சென்னை சர்க்கார் நோட்டீஸ்

வரி கேட்டது கண்டு மத்திய பிரதேச வியாபாரிகள் அங்கலாய்ப்பு!

பிற மாநிலங்களிலிருந்து சென்னை சர்க்கார் உணவுப் பொருள் கொள்முதல் செய்துவந்திருக்கிறது.

1953-ம் ஆண்டு ஏப்ரல் 1-ந் தேதி முதல், ஓராண்டு காலத்தில் மட்டும் ரூபாய் 500 கோடிக்கு, மற்ற மாநிலங்களில் இருந்து சென்னை உணவுப் பண்டங்கள் வாங்கியிருக்கிறது.

இந்த உணவுப் பண்ட விற்பனை வகையில், ஆங்காங்குள்ள வியாபாரிகள், சுமார் 8 கோடி ரூபாய் வரையில், சென்னைக்கு விற்பனை வரியாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

மேற்படி கோடிக்கணக்கில் உள்ள விற்பனை வரி பாக்கியை வசூலிக்க, அந்தந்த வியாபாரிகளுக்கு எச்சரிக்கை அனுப்பியிருக்கிறது.

மத்திய பிரதேசம், மத்திய பாரத், உத்திர பிரதேசம், பஞ்சாப், பெப்சு, ராஜஸ்தான், பம்பாய், ஐதராபாத் போன்ற மாநிலங்கள் சென்னை சர்க்காருக்கு விற்பனை வரி தர வேண்டியதாக இருக்கிறது.

'விற்பனை வரி கொடு' என்ற சென்னை சர்க்காரின் கோரிக்கையைக் கண்டதும், மத்திய பிரதேசத்தில் உள்ள வியாபாரிகளுக்கு ஆத்திரம் பொங்கி வழியத் தொடங்கி இருக்கிறது. தங்களை சென்னை சர்க்கார் விற்பனை வரி கொடு எனக் கேட்பது 'ரொம்ப அக்கிரமம்' என அங்கலாய்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்!

ராமாயண நாடகத்தில் அண்ணா

★

"'ராம ராஜ்ய'ப் பெருமைகளை இப்படி ஒன்றுதிரட்டி, 'இராமாயண'த்தை யார் இவ்வாறு தீட்டினார்கள் என்று கேட்கலாம்; நான் சொல்கிறேன்—இராதாவின் 'இராமாயண'த்தைத் தீட்டியவன் காலதேவன்!

"காலதேவன் தீட்டியுள்ள இந்த நாடகத்தை 'அவர்கள்' பார்த்தால், 'ஏன் தீட்டினோம், 'இராமாயணம்' எனும் நாடகத்தை' என்று கூட வருத்தப்படத் தோன்றும்.

"பல வருடங்களுக்கு முன்பே இப்படி நடித்துக் காட்டப்பட வேண்டிய 'இராமாயணம்' இப்போது நடைபெறுகிறது. 'ராம ராஜ்யத்தின் அருமை பெருமைகள்' காமராசரின் காலத்திலாவது நாட்டிலே நடமாட முடிகிறதே! காமராசர் இராதாவின் இராமாயண நாடகத்தை ஏற்றுக்கொண்டார் என்று கொள்ள முடியாது; இராதாவினுடைய இராமாயணமும் நடமாட அனுமதித்தார் என்பதால் நன்றி சொல்கிறேன் அவருக்கு.

"ஒரு இனத்தின் கலாச்சாரத்தை, வாழ்க்கை ஏற்பாடுகளை, பண்பாடுகளை, மாறுபட்ட ஒரு கலாச்சாரத்தைப் புகுத்துவதற்காக அழித்தொழிக்க நினைக்கும் இனவெறியில், கலாச்சார போராட்டத்தில் 'அவர்கள்' ஈடுபட்டனர். அதன் பலனை இன்று காண்கின்றனர். காலதேவன் இன்று பழி தீர்த்துக்கொள்கிறான்; கணக்குக் கேட்கிறான்!

"எங்களால் பழைய இராமாயணத்தை 50 வருடங்கள் தாங்கிக்கொள்ள முடிந்தது; 'அவர்களால்' புதிய இராமாயணத்தை 5 வருடம்கூட தாங்கிக்கொள்ள முடியாது; முடியுமா என்று அறைகூவிக் கேட்கிறேன்."

—இவ்வாறு, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் 29—9—54 அன்று, சென்னை, ஒற்றைவாடை தியேட்டரில் நடைபெற்ற தோழர் எம். ஆர். இராதா அவர்களின் 'இராமாயணம்' நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில், இன்று மாலை 6-30 மணிக்கு, நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களும், குழுவினரும் நடிக்கும் 'இராமாயணம்' நாடகம், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஏராளமான மக்கள் தியேட்டரை நிரப்பி இருந்தனர்.

நடிகவேள் ராதா அவர்கள் இராமர் வேடம் தாங்கி சிறப்புற நடித்தார். குழுவினரின் நடிப்பும் பாத்திரத்திற்கேற்ப திறம்பட இருந்தது.

இறுதியாக தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் நாடகத்தைப் பாராட்டியும், நாடகம் புதியதாக அமைக்கப்பட்டிருக்கும் முறை குறித்தும், 'ஏன் இராமாயண நாடகம் இராதா போன்றவர்களால் நடிக்கப்படுகிறது,' என்பதையும் விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினார்.

அத்துடன் இரவு 10 மணிக்கு நாடகம் இனிது முடிந்தது.

★

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மேலும் தொடர்ந்து பேசியதாவது:—

"நடிகவேள் இராதா, இராமாயணம் நாடகத்தை நடிக்கப் போகிறார் என்றதுமே பலருக்கு அதிர்ச்சி ஏற்பட்டதை நாம் கண்டோம்.

நாம் இங்கு கண்ட இராமாயண நாடகம், பல ஆண்டு ஆராய்ச்சியின் விளைவாக கிடைத்த கருத்துக்களை இணைத்து எழுதப்பட்டிருக்கிறது.

சுயமரியாதை இயக்கத்தவர் தான், முதன் முதலில், இராமாயணத்தை எதிர்த்துப் பேசும் அணியைப் பெற்றிருந்தனர்.

நாட்டிற்குத் தேவையான நல்ல கருத்துக்களைக் கூறும் வன்மையும் பெற்றிருந்த சுயமரியாதை இயக்கத்தின் வடைவரிசையிலே—பகுத்தறிவு இயக்கத்தின் வடைவரிசையிலே நண்பர் இராதாவுக்கு ஒரு இடமுண்டு.

கலை உலகிலேயும் அவர் தனக்கென ஒரு இடம்பெற்று விளங்குபவர்.

இப்படி இருகாலத்தில் பகுத்தறிவு உலகிலும், சுயமரியாதை இயக்கத்திலும் இடம் பெற்றிருப்பவர் இராதா; அவர், மிகத் துணிவோடு, இராமாயண நாடகத்திற்குப் புதுமெருகு கொடுத்து திறம்பட நடத்திக் காட்டுகிறார்; அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

'ராம ராஜ்யம்' எப்படி இருந்தது என்பது, இராதாவின் நாடகத்தில் நமக்கு விளக்கப்பட்டது.

பழைய ராமாயண நாடகங்களில், 25 வருடங்களுக்கு முன் நமது ராதா அவர்கள் பால ராமர் வேடம் தாங்கி நடித்

(4-ம் பக்கம் பார்க்க)

கோவா சர்க்கார் போக்கு

நம்பிக்கை அளிக்கவில்லை என்கிறார் பண்டித நேரு

"சமீப காலமாக போர்ச்சுகீசிய சர்க்காரின் செய்கைகள் அனைத்தும் நம்பிக்கை அளிப்பதாக இல்லை; இப் பிரச்சினையை சமரசமான முறையில் தீர்க்க இந்தியா உறுதி பூண்டிருக்கிறது,"

என்று நேரு மக்கள் சபையில் கூறினார்.

கோவா மக்கள் காட்டிவரும் உணர்ச்சி மிகவும் ஊக்கமளிப்பதாக இருக்கிறதென்று அவர் மேலும் கூறினார்.

போர்ச்சுகலுடன் நடந்து வரும் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக முட்டுக்கட்டை ஏற்பட்ட போதிலும், போர்ச்சுகீசிய நிர்வாகத்திற்கு முடிவு கட்டுவதைத் தவிர்க்க முடியாததாக்கும் வகையில் மற்றெல்லா நிகழ்ச்சிகளும் நடக்கின்றன;" என்று அவர் குறிப்பிட்டார்.

இ. தே. ரா. சொத்துக்கள்

இந்தியாவின் பங்கு

புதுடில்லி, செப். 29—மலேயாவிலுள்ள இந்திய தேசிய ராணுவ சொத்துக்களிலிருந்து, இந்தியாவுக்கு 1 கோடி 52 லட்சம் ரூபாய் பங்கு கிடைக்குமென்றும், இதில் மூன்றில் ஒரு பங்கு பாகிஸ்தானுக்கும், இரண்டு பங்கு இந்தியாவுக்கும் கிடைக்கும் என்றும் மத்திய உதவி அயல் நாட்டு மந்திரி சந்தா, மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

பிரெஞ்சிந்திய இணைப்பு!

ஒரு மாதத்தில் நடைபெறும்?

புதுடில்லி, செப் 29—பிரெஞ்சிந்தியாவின் எதிர்காலம் பற்றி நடைபெறும் பேச்சு வார்த்தைகள் திருப்திகரமாக நடைபெறுவது கண்டு தான் மகிழ்ச்சியடைவதாகவும், நல்ல தோர் முடிவு சீக்கிரமே ஏற்படுமென்று தான் நம்புவதாகவும் பண்டித நேரு மக்கள் சபையில் கூறினார்.

அடுத்த ஒரு மாத காலத்திற்குள் இணைப்புக்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியுமென்று அவர் மேலும் கூறினார்.

புதுச்சேரியும், மற்றப் பகுதிகளும் அளவில் சிறு பிரதேசங்களாக இருந்தபோதிலும், இப் பிரச்சினையில் இந்தியாவின் கௌரவமும், பிரான்சின் கௌரவமும் அடங்கியிருக்கிறது என்றும், அதைப் பாதிக்குமாறு எதையும் செய்ய தான் விரும்பவில்லை என்றும் பண்டித நேரு கூறினார்.

"பிரான்ஸ் ஒரு சிறந்த நாடு; அதனுடன் நட்பு முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகிறேன்," என்று அவர் மேலும் கூறினார்.

புதுச்சேரியில் பிரெஞ்சிந்திய சட்டசபையின் கூட்டமொன்றை அக்டோபர் 12-ல் கூட்டி இணைப்பு பற்றி வாக்கெடுப்பு நடத்த புதுவை அதிகாரிகள் முனைந்திருக்கிறார்களாம்.

இணைப்பு பற்றி பிரெஞ்சிந்திய சட்டசபை ஏற்கனவே நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை இந்திய சர்க்கார் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், புதிய வாக்கெடுப்பு எதும் கூடாதென்றும் தற்போது டில்லி வந்திருக்கும் தோழர் வே. தம்பி வற்புறுத்துகிறார் என்று தெரிகிறது.

இலங்கை இந்தியர் நிலை

நேரு வேதனைப்படுகிறாராம்!

இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை கண்டு, தான் மிகவும் மனவேதனை அடைந்துள்ளதாக பண்டித நேரு மக்கள் சபையில் கூறினார்.

அடுத்த சில நாட்களுக்குள் இலங்கைப் பிரதமரும், அவருடன் சில அமைச்சர்களும் பேச்சு வார்த்தை நடத்த இந்தியாவிற்கு வருகின்றனர் என்றும், இப்போது, தான், அதுபற்றி அதிகம் எதும் சொல்வதற்கில்லை என்றும் கூறினார்.

நாடற்றவர்களின் நிலை தீர்க்கப்படாமலும், பிரச்சினைகளுக்கும் பரிகாரம் காண கூறப்படும் வழி முறைகளை தகுதியானபடி உணர்ந்து கொள்ளாத நிலையையும் கண்டு தான் மிகவும் மனவேதனை அடைந்துள்ளது உண்மை என்பதையும் பண்டித நேரு ஒப்புக்கொண்[illegible]

★

தூதுவர் தேசாய் கூற்[illegible]

சென்னையில் முதல் அமைச்சர் காமராசரைச் சந்தித்[illegible] பேசிய இலங்கை இந்தியத் [illegible]வர் தேசாய், தற்போது [illegible]கையில் உள்ள 25,000 [illegible]கள், இந்த நடவடிக்கை[illegible] மாதங்களுக்கு ஒருமுறை[illegible] கேள் கீதம் அனுப்ப[illegible]

நம் நாடு

திமுகத்தின் இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 30—9—54 வியாழன்

மத்திய சர்க்கார் மதியீனம்

சவ்வரிசி வெளி நாடுகளி லிருந்து இனி ஆண்டுதோறும் இந்தியத் துணைக் கண்டத்தில் இறக்குமதி செய்யப்படுவதே இல்லையாம். சவ்வரிசி பெரும் பாலும் மலாயாவின் உள்ள ஒதுவை தேசத்தின் தண்டு வுள்ள சோற்றிலிருந்து தயா ரிக்கப்படுவதாகும். உள்நாட் டுத் தொழிலுக்கும் பாதுகாப் புத் தர வேண்டும் என்ற நோக்குடனேயே, மலாயாவி லிருந்து இறக்குமதி செய்யப் பட்டு வந்த சவ்வரிசிக்குத் தடை விதிக்கப்பட்டது வெளி நாடு உண்மையானாலும், உல கப் பெரும் போரும், அதற் குப்பின்னர் மலாயாவில் நடை பெற்ற உள்நாட்டுக் குழப்ப மும் சவ்வரிசி உற்பத்தியைக் குறைத்து ஏற்றுமதிக்கு இடைஞ்சல் விளைவித்ததும், அதை இங்கு முன்போல் இறக் குமதி செய்யாததற்குள்ள மற்றொரு காரணமாகும். எது காரணமாக இருந்தபோதி லும், சவ்வரிசியை இந்தியத் துணைக்கண்டம் சில ஆண்டு களாக இறக்குமதி செய்வது இல்லையாது என்பது மட்டும் அறியக்கிடக்கிறது.

வெளி நாட்டில் சவ்வரிசி உற்பத்தியில் குறைவு ஏற் பட்டுவிட்டதாலும், இங்கு இறக்குமதிக்குத் தடை விதிக் கப்பட்டு விட்டதாலும், அதற் குப் பதிலாக மரவள்ளிக்கிழங் கின் மாவைக் கொண்டு சவ் வரிசி தயாரிக்கப்பட்டு வந்தது. அக்கிழங்கு மாவினால் தயா ரிக்கப்படும் சவ்வரிசி, இறக்கு மதி செய்யப்பட்டு வந்த சவ் வரிசியைக் காட்டிலும் குணத் தில் கூடுதலாக இல்லையானா லும், மக்கள் நலத்திற்குக் கேடு பயப்பதாக இருக்க வில்லை. இறக்குமதி சவ்வரிசி யைப்போல உயிர் வளர்க்கும் தரம் உள்நாட்டு சவ்வரி சிக்கு இல்லையானாலும், சாதா ரண அரிசியைக் காட்டிலும் உயிர் வளர்க்கும் தன்மை அதில் இருக்கத்தான் இருக் கிறது. எதைக் கொண்டு பார்ப்பதாக இருந்தாலும் மர வள்ளிக் கிழங்கின் மாவி லிருந்து உருவாக்கப்படும் சவ்வரிசி மக்கள் நலத்திற்கு ஊறு தேடுவதாக இல்லாமல், உதவுவதாக இருக்கிறது என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும்.

மரவள்ளிக் கிழங்கின் மாவைக் கொண்டு உருவாக் கப்படும் சவ்வரிசித் தொழி லுக்கு நமது திராவிடமே முதன்மை இடத்தைப் பெற் றிருக்கிறது. சேலம் மாவட் டத்திலும், திரு-கொச்சியி லும் உள்ள பல்லாயிரக்கண க்கான உழவர்கள் அத் தொழிலில்

லாக அருமையான வேறு உணவுப் பொருள் தேடப் பட்டு வந்தது. அத்தேவை யையும் மரவள்ளிக்கிழங்கு மா ஈடு செய்வதில் வெற்றி கண்டது.

பல்லாண்டுப் பழக்கத்தின் காரணமாக, நம்மவர்களுக்கு அரிசி சோறு சாப்பிடாவிடில் ஏற்படுகிற மனத் திருப்தியும் சாந்தியும், மரவள்ளிக்கிழங் கின் மாவினால் செய்யப்பட்ட அரிசியில் ஏற்படவில்லையானா லும், உடல் நலம் குன்றுவ தற்கு ஏதுவும் ஏற்படவில்லை.

இந்த தென்னாட்டில் உரு வாக்கப்படும் மரவள்ளிக் கிழங்கு மா சவ்வரிசி, மற்ற மாநிலங்களில் விற்கப்படுவ தாக இருந்த போதிலும், வங்காளத்தில் அதற்கு நல்ல சந்தை—அதிக விற்பனை கடந்த பதினொன்கு ஆண்டுக ளாக, திராவிடத்திலி ருந்து இப்புது முறை சவ் வரிசி ஏற்றுமதி செய்யப் பட்டு வருகிறது. இந்தப் பதினான்கு ஆண்டுகளாக வங் காளிகள் இப்புது முறை சவ் வரிசியை, பிறநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சவ் வரிசி என நம்பியே வாங்கி வந்திருந்தாலும் இருக்கலாம், அல்லது, மாறுபட்டது என்று தெரிந்துகொண்டு வாங்கியவ ராக இருந்தாலும் இருக்கலாம். விஷயம் தெரிந்து வாங்கி வந் ததாக இருந்தாலும், அறி யாது வாங்கி வந்ததாக இருந்தாலும் புது முறை சவ்வரிசியை உபயோ கப்படுத்தி வந்த வங்காளிக ளுக்கு, இதனால், சிறப்பான சுகக் குறைவு ஏதாவது ஏற் பட்டதாக, இதுவரை ஒரு தகவலும் இல்லையாம். தோற் றத்திலும், உருசியிலும், குணத் திலும் சுத்தமித வேற்று மையும், இருவகை சவ்வரிசி களுக்கும் இருப்பதாகத் தெரிந்து கொள்ள முடியாத காரணத்தால்தான், வங்காளி கள் புது முறை சவ்வரிசியை, பழக்கம்போல வாங்கி பயன் படுத்தி வந்திருக்கிறார்கள் என்ற முடிவிற்கு வருவதற்கு வேறு அறிவு தேவை இல்லை.

இத்தனை ஆண்டு காலமாக புது முறை சவ்வரிசியைக் குறித்து கவலைப்படாமல் இருந்து, சவ்வரிசி என்ற பெய ரில் விற்கவும் அனுமதித்து வந்த வங்க சர்க்கார், இதுவரை தூங்கிக்கொண்டு இருந்து, திடீ ரென்று, புது முறை சவ்வரி சியை விற்கக்கூடாது என்று தடை விதித்து விட்டது. தடை விதித்ததோடு மட்டும் நிற்காமல், அங்கு வியாபாரிக ளிடம் கையிருப்பில் இருந்த நாற்பதினாயிரம் மணங்கு சவ் வரிசியையும் முடக்கியும் விட் டிருக்கிறது. இந்தக் காரியத் தையும் தாமே அறிவு பெற்று வங்க சர்க்கார் செய்ய முன்வர வில்லை.

கல்கத்தாவிலுள்ள ஒரு பெரிய ஹோட்டல் அதிகாரிகளுக்கு வயிற்று வலி ஏற்பட்டதாம். அவர் களுக்கு சிகிச்சை செய்த மருத் துவர் சவ்வரிசி ஆகாரம் உட் கொண்டதாகச் சொன்னாராம்.

அங்கு கடைகளில் விற்கப் படும் சவ்வரிசியை வாங்கி உண்டதின், அவருடைய வயிற்று வலி குணமடைய வில்லையாம். உடனே அவர் தெரிவித்த புகாரைக் கல்கத்தா நகராட்சி மன்றம் ஏற்றுக் கொள்ள, வங்க சர்க்கார் புது முறை சவ்வரிசியைக் குழி தோண்டிப் புதைக்கக் கிளம்பி விட்டது.

இப்பொழுது கல்கத்தா கடைகளில் விற்கப்படும் புது முறை சவ்வரிசியின் உண் மையை, எல்லா சாதாரண வங்கக் குடிமக்களும் தெரிந்து கொண்டிருப்பது முடியாத காரியம். ஆனால், வங்க சர்க் கார், அந்த உண்மையை இத் தனை ஆண்டுகாலமாக அறிந்து கொள்ளாமல் இருந்திருக் கிறது என்பது ஒருவராலும் ஒப்புக் கொள்ள முடியாத தாகும். நகராட்சி மன்றத் திற்கும் அந்த உண்மை தெரிந்துதான் இருக்க வேண் டும்.

நமக்குத் தெரிந்த ஒரு உண்மையை இதுவரை குடி மக்கள் அறியாவண்ணம் மறைத்து வைத்திருந்து, இது வரை தெரியாதிருந்த உண் மையை இப்பொழுதுதான் அதிசயமாகக் கண்டுபிடித்தது போல, புது முறை சவ்வரிசி மீது போர் தொடுக்க வங்க சர்க்கார் கிளம்பி இருப்பது கேலிக் கூத்தேயாகும். சவ்வரிசி இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டு விட்டது; இப்பொழுது அந்தப் பெயரில் விற்கப்படுவது உள்நாட்டுச் சரக்கு என்ற உண்மையை, ஏற்கனவே வங்க சர்க் கார், குடிமக்களுக்கு அறிவித் திருந்தால், குடிமக்கள் உள்நாட்டு சவ்வரிசியின் உண் மையைத் தெரிந்துகொண்டு, விரும்பினால் கொண்டும், வேண்டாமென்றால் கொள் ளாமலும் இருந்து விட்டிருப் பர். எல்லாவற்றிற்கும் மேலாக, வயிற்றுவலி போடு வதை பட்டுக் கிடக்கும் போலீஸ் அதிகாரியும், உள் நாட்டு சவ்வரிசியை வாங்கி ஏமாற்றமடைந்து, எரிச்சல் அடைந்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது.

இவ்வளவு ஆண்டுகாலமாக உள்நாட்டு சவ்வரிசியின் உண் மையை மறைத்து வைத் திருந்து, வங்கக் குடிமக்களை நம்பிக்கை மோசடி செய்து வந்ததற்கு, முழுதும் பொறுப்பேற்க வேண்டியது வங்க சர்க்காரேயாகும். மக் களுக்குச் செய்ய வேண்டிய கடமையை பல ஆண்டுகால மாக மறந்துகிடந்த வங்க சர்க்கார், கடமையும் ஒரு சர் க்கார் எனக் கூறிக்கொள்ளும் தகுதியையும் இழந்துவிட் டது எனக் கூறுவதானாலும், அது மிகைப்படக் கூறிய தாகாது.

இந்த சவ்வரிசி விஷயத் தில், தம் கடமையை மறந்து செயலாற்றி வந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டிற்கு, வங்க சர்க்கார் மட்டுந்தான் பொறுப்பேற்க வேண்டியது என்று முடிந்துவிடுவதற் கில்லை. வங்க சர்க்காரைக் காட்டிலும், இந்த விவகாரத் தில், அதிகப் பொறுப்பு டெல்லி சர்க்காருக்கு உண்டு. டெல்லி சர்க்காராவது உள் நாட்டு சவ்வரிசியின் உண் மையை, ஏற்கனவே சாதா ரண மக்களும் புரிந்துகொள் ளும் வகையில் விளம்பரம் செய்திருக்க வேண்டும். மத்திய

கள் மண்வெட்டுவது, செடி நட்டுத் தண்ணீர் ஊற்றுவது, மாடு மேய்ப்பது போன்ற சம்பவங்களை எல்லாம் காட் சிப் படங்களாக்கிப் பாட்டு தொட்டிகளின் எல்லாம் காட் டச் செய்து, சுயவிளம்பரம் தேடிக்கொள்ளும்பொழுது, குடிமக்களின் உணவைக் குறித்த முக்கியமான இது வகையில், மத்திய சர்க்கார் தம் கடமையைச் செய்யத் தவறியது, மன்னிக்க முடியாத பாபெரும் குற்றமாகும். மக் களைப் பற்றிய முக்கியமான உணவு விஷயத்தில், இது வரை மத்திய சர்க்கார் மவுனம் சாதித்து வந்தது, அதன் மதியீனம் என்றுதான் கொள்ள வேண்டியதாக இருக் கிறது.

உள்நாட்டு சவ்வரிசியின் உண்மையை ஏற்கனவே மத் திய சர்க்கார் நல்ல முறையில் விளம்பரம் செய்திருக்குமா னால், தென்னாட்டு சவ்வரிசி வங்கத்தில் விற்கப்படுவதைத் தடுக்க வேண்டிய கட்டாயம் வங்க சர்க்காருக்கு ஏற்பட்டே இருக்காது. வங்க மக்களுக் கும் உள்நாட்டு சவ்வரிசிமீது வெறுப்பு தோன்றவும் ஒரு வாய்ப்பு கிடைத்திருக்காது. அதுவுமன்றியில், தென்னாட் டுத் தொழிலுக்கு நெருக்கடி ஏற்படும் விடுமோ என்று அஞ்சுவதற்கும் இடமிருக் திருக்காது.

உள் நாட்டு சவ்வரிசியை தங்கள் மாநிலத்தில் விற்கக் கூடாது எனத் தடுத்து விட் டதைக் காரணமாகக் காட்டி, ஒரு மாநில சர்க்காருக்குள்ள அதிகாரத்தைப் பறித்து, தமதாக்கிக் கொள்ளும் அதிகார முனைப்பை மத்திய சர்க்கார் காட்டிக்கொள்ள முன்வருவதும் கூடாது. அது ஒருக்காலும் நேர்மை யாகாது. விஷயம் நெருக்கடி யைப் பெறுவதற்குள்ளாக, உள்நாட்டுச் சவ்வரிசிக்கு அது பெரிதும் தென்னாட்டி லேயே தயாரிக்கப்பட்டு வரு வதால், 'திராவிட சவ்வரிசி' (DRAVIDIAN SAGO) எனப் பெயரிட மத்திய சர்க் கார் முன்வர வேண்டும். அப்பெயரிட மத்திய சர்க்காருக்கு வேறுஎன்ன இருக்காது என்பதை நாம் அறிவோம். எனவே, 'தென்னாட்டு சவ்வரிசி' (SOUTH SAGO) எனப் பெயரிட்டு விட்டால், உள் நாட்டு சவ்வரிசி அப்பொழு தும் விற்கப்படுவது போல இனியும் வங்கத்தில் விற்பனை யாக இடம் கிடைக்கும்.

தென்னாட்டுத் தொழிலுக் கும் பழுதொன்றும் ஏற் படாது. இந்த நல்ல மதி, மத்திய சர்க்காருக்கு விரை வில் ஏற்படுவதுதான் நாட் டிற்கு நல்லது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சுமார் 17 கோடி ரூபாய் செலவில், 200 பாதை - பாலக் களைக் கட்டத் திட்டமிடப்பட் டிருக்கிறது.

'நாடற்றவர்கள்' என்ற பிரச்சினையே இராது!

இந்தியா வரும் இலங்கைத் தூதுக் குழுவினரிடையே ஏற்பட்ட முடிவு

இலங்கையர் அல்லது இந்தியர் என்ற இரு பிளவுதான் உண்டு

புதுடில்லியில் அக்டோபர் 9-ம் தேதியன்று நடைபெறும் இந்திய—இலங்கைப் பேச்சு வார்த்தைகளில் நாடற்றவர்க ளாகப்படும் இந்தியர்களைப் பற்றித்தான் முக்கியமாக விவா திக்கப்படும் என்று தெரிகிறது.

இலங்கைப் பிரதமரின் இல் லத்தில் நடைபெற்ற தூதுக்குழு வின் கூட்டத்தில் மேற்கண்ட முடிவெடுக்கப்பட்டதாகத் தெரி கிறது.

இலங்கை, யாரையும் நாடற்ற வர்கள் என்று ஒப்புக்கொள்ளா தாம்! இலங்கையில் உள்ள இந்தி யர்களைப் பொறுத்த மட்டில் இரண்டு பிரச்சினைகள்தான் இருக்க முடியுமாம். இலங்கைய ராகப் பதிவு செய்ய மனு செய்து கொண்டிருப்போரை இலங்கைய ராகப் பதிவு செய்துகொள்ள மறுக்கப்பட்டோர் அனைவரும் இந்தியக் குடி மக்களாகவே கரு தப்படுவோர்கள் என்று தெரி கிறது. இலங்கையில் குடி உரிமை பெற முடியாதவர்கள் இந்திய அரசியல் சட்டப்படி இந்தியர்களாகப் பதிவு செய்யப் படுவர் என்று தெரிகிறது.

நாளும் பேச்சு வார்த்தை களில் கலந்துகொள்ள புதுடில் லிக்குச் செல்லும் வகையில் நனைக்கும் பிரதமருக்கும் இடையே குழப்பில் காணப்படுவ தாக எதிர்க் கட்சித் தலைவர் பண்டாரநாயகா கூறினார்.

☆

நேருவின் அறிவிப்பு

இந்தியாவுக்கு இலங்கையி லிருந்து தூதுக் குழு ஒன்று வரு வது இலங்கை பிரதமரின் முயற்சியே என்றும், இப்பேச்சு வார்த்தைகளில் புதிய ஒப்பந்தம் பற்றிய விவரம் ஏதும் இரா தென்று பண்டித நேரு இந்திய மேல்சபையில் கூறினார். ஆனால் இலங்கைக் குழுவினர் விவாதிக்க விரும்பும் எந்த பிரச்சினை பற்றி யும் விவாதிக்க தான் தயாராக இருப்பதாக பண்டித நேரு மேலும் கூறியுள்ளார்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

தூத்துக்குடி தோழர்கள்மீது நடைபெற்று வரும் சதி வழக் கில், திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி இராதா கிருஷ்ண முதலியார் 25-9-54 - முடிய சுமார் 106 சாட்சிகளை விசாரித்திருக்கிறார். இதோடு அரசாங்கத் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிவுற்றது.

மணவாள ராமானுஜம்

வேங்கடேஸ்வரா பல்கலைக் கழக பேராசிரியராக நியமனம்

திருப்பதி, செப். 26—

அண்ணாமலைப் பல்கலைக் கழ கத்தின் முன்னாள் துணைவேந்த ரான டாக்டர் மணவாளராம னுஜம் வேங்கடேஸ்வரா பல் கலைக் கழகத்தில் பிராணி நூல் இலாப் பேராசிரியராக நியமிக்கப் பட்டிருக்கிறார் என்று, துணை வேந்தர் எஸ். கோவிந்தராஜு நாயுடு அறிவித்தார். டாக்டர் மணவாளராமானுஜம் அடுத்த வாரம் தனது புதிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளுவார் என்று தெரிகிறது.

வாணிப முறை தெரியாத பண்டிதர் ஆட்சி!

ஒப்பந்தங்கள் செய்வதில் பல கோடி ரூபாய்களை கோட்டைவிட்டது!

இராணுவ இலாக்கா இரகசியங்களை வெளி நாட்டார் தெரிந்துகொண்ட விபரீதம்

குளிருக்குக் கேட்ட கம்பளிகள் கோடைக்குக் கிடைத்த விந்தை!

கிடைத்ததும் கெட்டுப்போய் ஏலமிடப்பட்டது!

வரவு-செலவு கணக்குக் குழு தரும் திடுக்கிடும் தகவல்

மக்கள் சபை நியமித்த அரசாங்க வரவு—செலவுக் கணக்குக் குழு, "வெளிநாடுகளிலிருந்து பண்டம் வாங்குவதற்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தங்களிலும், வேறுபல வாணிப நடைமுறைகளிலும் தொன்று தொட்டு இத்துறைகளில் கடைப்பிடித்துவரும் நெறிமுறைகளிலும், அடிப்படையான, சாதாரண முன் யோசனை இல்லாமலும், அலட்சியமாகவும் மத்திய அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது," என்று, கவலை தெரிவித்திருக்கிறது.

"தேவையற்ற இடங்களில் எல்லாம் இந்த வர்த்தக பேரங்களில் தரகர்கள் காரணமின்றியே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய தவறுகள் எல்லாம், சட்டத்தில் உள்ள சிறு சிறு குறைபாடுகளால்தான் நிகழ்ந்துள்ளன என்று கொள்வதற்கில்லை," என்றும் அந்தக் குழு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறது.

"கணக்குக் குழு இயங்குவதற்கு அதிகார வரைமுறைகள் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், இந்த ஊழல்களைப் பற்றி வேறெதுவும் கூற முடியாத நிலையிலிருக்கிறது.

"தவறுகள் நிகழ்ந்தமைக்கு, யார், யார் பொறுப்பாளிகள் என்பதை விரிவானதொரு விசாரணை மூலம் கண்டறிய இரண்டொரு உயர்நீதி மன்ற நீதிபதிகளைக் கொண்ட தனி விசாரணைக் குழு நியமிக்கலாம்," என்றும் அந்தக் குழு கருத்தறிவித்திருக்கிறது.

நான்கு வகையான ஒப்பந்தங்கள் குறித்து, வரவு-செலவுக் கணக்குக் குழு ஆராய்ந்துள்ளது. அந்த ஒப்பந்தங்கள் நான்கும் எண்டன் நகர வியாபாரிகளுடன் செய்யப்பட்டவை என்று தெரிகிறது.

(1) ஜீப் கார் ஒப்பந்தங்கள்; (2) இராணுவ இலாகாவிற்குத் தேவையான சாமான்கள் வாங்குவதற்கான இரண்டு ஒப்பந்தங்கள்; (3) விமானக்கூடங்களுக்கான சாமான்கள் வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தம்; (4) இங்கிலாந்தில் கம்பளங்கள் வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தம்.

"இராணுவ இலாகாவிற்குத் தேவையான சாமான்கள் இன்னின்னவை, அவைகள் இன்ன விலைக்கு இத்தனை அளவு வாங்கலாம் எனத் திட்டமிடுவதில் பல தவறுகள் நிகழ்ந்துள்ளன;

"1949—50-ல் வாங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட அளவு சாமான்களுக்கு இரண்டு முறைகள் தவறாகப் பணம் தரப்பட்டுள்ளது. இதனால் ரூ. 1,05,60,000 நஷ்டமேற்பட்டிருக்கிறது;

"இம்மாதிரி, இராணுவச் சாமான்கள் வாங்குவதற்காகத் திட்டமிடுவதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பதை முன்பே அறிவித்திருக்கிறோம்,"

என்றும் அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

மக்கள் சபை நியமித்த அந்தக் குழு மேலும் தனது அறிக்கையில் கூறுவதாவது:—

"இராணுவ இலாகாவினர், ஏற்கனவே தங்களிடமுள்ள சரக்குகள் இவ்வளவு என்பதற்கான விவரங்களையும், புதிய சரக்குகள் வரும்போது அவற்றை பழைய சரக்குகளுடன் சேர்த்திருப்பதற்கான விவரங்களையும் சரிவர வைத்திருக்கவில்லை. ஏராளமான சந்தர்ப்பங்களில், இத்தவறுகள், விமானம் ஊட்டும் கிடங்குகளில் நிகழ்ந்துள்ளன.

கிடங்குகளில் உள்ள சாமான்களுக்கான கணக்கு விவரங்கள், இராணுவ, விமான, கப்பல்படை இலாகாக்களில், யுத்தம் முடிந்த பல ஆண்டுகளாகியும், சரிவர இல்லாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

தங்களிடம் இவ்வளவு சாமான்கள்தான் உள்ளன—இந்த ஆண்டிற்கு இவ்வளவு சாமான்கள் தேவை என்ற விவரங்கள் நிரவலமாக ஓரளவேனும் இராணுவ இலாக்காவிற்குத் தெரிந்திருக்க வேண்டாமா? அப்படித் தெரியாமலிருந்தால், நிர்வாகம் எப்படித் திறம்பட இயங்க முடியும்?

ஜீப் கார் வாங்கியதில் ஏற்பட்ட ஊழல்களின் பலனாய் பல கோடி ரூபாய் பாழானது குறித்து, ஏற்கனவே இந்தக் குழு விரிவானதொரு அறிக்கை தந்துள்ளது.

முதன் முதலாக ஜீப் கார்கள் வாங்குவதற்காக இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில்கீழ்க் கண்ட கண்டிக்கத்தக்க அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன:—

(1) 'டெண்டர்கள்' கோரப்படவில்லை; (2) முன்பின் தெரியாத போதுமான பொருளாதார முடக்கம் இல்லாத ஒரு கம்பெனியைத் தேர்ந்தெடுத்தது; (3) அந்தக் கம்பெனிக்கு முன்பணம் தரும்போதும், அக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும்போதும் அக் கம்பெனியின் பாங்கு வரவுசெலவு விவரங்களைத் தெரிந்துகொள்ள முயற்சிக்காதது; (4) ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்த தொகையை, சரியான காரணம் இன்றி தெரிந்துகொண்டு அதிகப்படுத்தியது; அதனால் ஏராளமான பணம் முன் பணமாகத் தரப்பட்டு நஷ்டமேற்பட்டது; (5) 502 ஜீப் கார்களையும் பரிசோதிக்கப்பட்ட 'சர்டிபிகேட்டுகள்' இல்லாமலேயே 81,575 பவுன்களைத் தந்தது; (6) ஒப்பந்தத்தை சரிவர நிறைவேற்றுதவோன கம்பெனியிடமிருந்து தரப்பட்ட பணத்தை திரும்பப் பெற செய்யவேண்டிய முயற்சிகளில் அக்கரையுடன் ஈடுபடாதது—இவை யெல்லாம் வரவு—செலவுக் கணக்குக் குழுவால் கண்டிக்கப்பட்டுள்ளன.

குழு நடத்திய விசாரணையின் போது, பாதுகாப்பு இலாகா, 'பாங்கி அந்தாட்சி' என்ற சொல்லில் ஒரு குறிப்பைக் காட்டினர். அதில், "கம்பெனி நிர்வாகிகள் இருவரும் மதிப்பிற்குரியவர்கள் தான்; அவர்களுடைய பொருளாதார நிலைகள் குறித்து எங்களுக்கும் பூரணமாகத் தெரியாதபோதிலும், வியாபார ஒப்பந்தங்கள் செய்வதற்குரிய நம்பகமானவர்கள் என்பதே எங்கள் அபிப்பிராயம்" என்றுள்ளது.

வியாபாரத் துறையில் ஈடுபாடும், வாங்கி நடைமுறைப் பழக்கமும் உடையவர், எவ்விதத் தயக்கமும் இன்றி மேற்கண்ட குறிப்பை, ஒரு 'பாங்கி அந்தாட்சி'யாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுவார்களே; அதிலும் பல கோடி ரூபாய் பெறுமான பேரத்தில் ஈடுபடும்போது, இந்தக் குறிப்பை யாருமே 'பாங்கி அந்தாட்சி'யெனக் கொள்ள மாட்டார்கள்.

இந்தியத் தூதுவர்கள், இந்த ஜீப் கார் வாங்குகிற பேரத்தின் போதாவது, புதியதாகச் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்போதாவது, அங்குள்ள அரசாங்கத் துறையை, புதிய ஒப்பந்தம் செய்யும் முன் அந்தக் கம்பெனியின் பொருளாதார நிலை குறித்தும், அந்தக் கம்பெனி நிர்வாகிகளின் யோக்கியதாம்சம் குறித்தும் விசாரித்திருக்கலாம்; அதைச் செய்ய இந்தியத் தூதுவர் தவறிவிட்டார்.

முதலாவது ஒப்பந்தத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டுவோம் என்று சொல்லுகிற புதிய கம்பெனியின் வாக்குகளை அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கக் கூடாது. அவர்கள் தருவதாகக் கூறின 1,43,162 பவுனையும் தாங்கள் நஷ்டப்பட்ட பொருளுக்குச் சமமெனக்கொண்டது இந்திய அரசாங்கம் விளைவித்த தவறாகும்.

1951-ல், புதியதாக எஸ். சி. எஜன்ஸி, லிமிடெட் கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, ஒன்று 458 டாலர் வீதம் 1007 ஜீப் கார்களை அக் கம்பெனி தருவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது 1952 செப்டம்பருக்குள் அந்தக் கம்பெனி 1007 ஜீப்களையும் தந்திருக்க வேண்டும்; ஆனால், ஒப்பந்த நிபந்தனைகளையும், வாக்குறுதிகளையும் மீறி அக் கம்பெனி இன்றுவரை 49 ஜீப் கார்களையே இந்தியாவுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஒப்பந்தத்தில் கண்ட விலைப்படி பாக்கியுள்ள ஜீப் கார்களைத் தர அக்கம்பெனி விரும்பவில்லை எனத் தெரிகிறது.

அந்தக் கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திலும் ஏற்பட்ட நஷ்டத்தை, திரும்ப அக்கம்பெனியிடமிருந்து பெறுவதற்காக, இந்திய அரசாங்கம் சிவில் வழக்கொன்று தொடருவது பற்றி யோசித்து வருகிறது.

முதல் ஒப்பந்தப்படி இந்திய அரசாங்கம் சுமார் ரூ 19 லட்சம் நஷ்டமடைந்தது."

இன்னுமொரு ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ள ஊழல்களையும் குழு தந்துள்ளது.

"1950 டிசம்பர் 22-ல், லண்டனில் உள்ள இந்தியத் தூதுவராலயத்திற்கு பாதுகாப்பி லாக்கா, இராணுவ சாமான்கள் தேவைக்கான பட்டியல் ஒன்றை கடிதம் மூலமாக அனுப்பி வைத்தது; அக்கடிதம் அனுப்பிய பட்டே நாட்களில் எஸ். கெ. பி ஏஜென்ஸியார், தாங்கள் தரகர்களாயிருந்து அந்தச் சாமான்களை வாங்கித் தருவதாகத் தூதரிடம் குறிப்பிட்டிருக்கின்றனர். அதன்படி டிசம்பர் 30-ல் அந்தக் கம்பெனியார் சாமான்கள் வாங்கித் தர பேரம் பேச இந்தியத் தூதுவரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

1950 ஜூன் மாதத்தில்தான் புதிய கம்பெனி ஒன்றைத் துவக்கியுள்ளவர்களிடம் சாமான்கள் வாங்குவதற்கு பேரம் நடைபெற்றதாம்.

ஒரு நாட்டின் இராணுவ சாமான்களின் தேவை பற்றிய விபரங்கள் மிக இரகசியமானவையாகும்; அவை, எப்படி, வெளி நாட்டில் உள்ள தூதுவருக்கு அனுப்பப்பட்ட பட்டே நாட்களில், வேற்று நாட்டு வியாபாரக் கம்பெனியாருக்குத் தெரிந்து, அவர்களாகவே பேரம் பேச முன்வர முடிந்தது என்பதைத் தனியாக ஒரு விசாரணைக் குழுவினர் விசாரித்தறிய வேண்டுவது மிகவும் விரும்பத்தக்கதாகும்," என்றும் கணக்குக் குழு குறிப்பிட்டிருக்கிறது.

கம்பளங்கள் வாங்கிய வகையில் ஏற்பட்ட ஊழல்களும் வெளியாகியுள்ளன.

50,000 கம்பளங்களில் பெரும் பகுதியானவை உபயோகமற்றவையாகப் போய்விட்டன. அவற்றை ஏலம் போட்டதின் மூலம் ஓரளவு நஷ்டத்தை ஈடுகட்டலாமெனினும், வாங்குவதற்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி கம்பளங்கள் குறிப்பிட்ட காலத்தில் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும்; அதுவும் வரவில்லை. 'குளிர் காலத்திற்காக வேண்டிக் கேட்ட கம்பளிகள், கோடைக் காலம் வந்தபின் தான் கிடைத்தன. அருப்புகளுக்கு மாரிக்காலத்தில் அவை கொடுக்கப்பட முடியவில்லை.

இம்மாதிரி பலப்பல தவறுகள், சற்று கவனித்திருந்தால் தவிர்த்திருக்கக்கூடியவை, நிகழ்ந்துவிட்டிருக்கின்றன.

மேலும், இந்தக் கம்பளங்கள் வாங்குவது பற்றி நடந்த கடிதப் போக்குவரத்துக்கள் கொண்ட 'பைல்'கள், நாசம் செய்யப்பட்டுவிட்டன. அம்மாதிரி, வியாபார சம்பந்தப்பட்டதும், இரா முக்கியமானவையுமான 'பைல்'கள், அசட்டையாக, சுலபமாக பார்க்கப்பட்டு அழிக்கப்படாமல் இருக்கும்படி செய்வதில் அரசாங்கம் போதுமான கவனம் செலுத்த வேண்டும்.

பொதுவாக இம்மாதிரி ஊழல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கும் அதிகாரிகளின் கவனக் குறைவும், அலட்சிய மனப்போக்கும் அரசாங்கத்தால் கண்டிக்கப்பட வேண்டும்.

'இங்கிலாந்தில் உள்ள இந்தியத் தூதர் உடனடியாக, இங்கிலாந்து அரசாங்கத்திடமிருந்து வரவேண்டியுள்ள 37,83,100 பவுன்களையும் திரும்பப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்யுமாறு தூண்டப்பட வேண்டும். இல்லாவிடில் காலதாமதம் இன்னும் அதிகமான பொருள் நஷ்டத்தை உண்டாக்கி சிக்கலை வளர்க்கும்," என்றும் கணக்குக் குழு கூறுகிறது.

ஐப்பானிய நெல் சாகுபடி முறை இதுவரை சுமார் 2,00,000 ஏகரா நிலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; மேலும் சுமார் 30 இலட்சம் ஏகராவில் ஓரளவு கையாளப்பட்டு வருகிறது.

தென்னாட்டைப் பற்றி வடவருக்கு ஒன்றுமே தெரியாது!

அவரவர்கள் மாநிலங்களைக் குறித்துத்தான் அவர்கள் கவலை!

நமது செய்திகள் வடநாட்டு இதழ்களில் காண முடியாது!

சென்ற வாரம் ஐ. ஏ. எஸ். பரீட்சைகள் டில்லி சர்வகலா சாலையில் நடந்தபோது அவைகளை கண்காணிக்க மத்திய அரசாங்க அலுவலகங்களிலிருந்து சில அதிகாரிகள் வந்திருந்தனர்; நானும் அதற்காக அவர்களுடன் போயிருந்தேன். இடைவேளையில் நாங்கள் கூடிப் பேசிக்கொண்டிருக்கையில் 'தமிழ்நாடு' தினத்தாளை ஒரு வேலைக்காரன் என்னிடம் கொடுத்துச் சென்றான். "அது என்ன பத்திரிகை; எங்கே பிரசுரிக்கப்படுகிறது" என்று பல கேள்விகள் கேட்கப்பட்டன. அதற்கெல்லாம் பதிலளித்தேன்; இதிலிருந்து தென்னாட்டின் சமூக, பொருளாதார அரசியல் நிலைமையைப் பற்றிப் பலகேள்விகள் கேட்டார்கள்.

வடநாட்டாருக்குத் தென்னாட்டைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவர்கள் படிப்பதெல்லாம், அவரவர் மாகாணங்களைப் பற்றியேதான். இங்கே பிரசுரிக்கப்படும் தினத் தாள்களில் தமிழ் நாட்டுச் செய்திகளே பார்க்க முடியாது.

"மதராஸி என்று மனிதனும் கிடையாது; தென்னாட்டில் தமிழன், தெலுங்கன், மலையாளி என்று தனித்தனி மக்கள் இருக்கிறார்கள்; இவர்கள் பேசும் மொழிகள் வெவ்வேறு," என்று நான் விளக்கிச் சொன்னபொழுது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று.

"தென்னாட்டிற்குப் போக வேண்டும்; சேலம், மதுரை, ராமேஸ்வரம் சென்று சுவாமி தரிசனம் பண்ணவேண்டுமென்று இருக்கிறேன்; ஆனால், அதற்குள் தென்னிந்தியர் இந்தி கற்றுக்கொண்டு விடுவார்கள் என்று நினைக்கிறேன்" என்று அவர்களில் ஒருவர் சொன்னார்.

"தென்னாட்டு மக்கள் இந்தி கற்றுக்கொண்டால்தான் நீங்கள் தென்னாடு போவதாயிருந்தால், நீங்கள் இந்த ஜென்மத்தில் போகப் போவதில்லை. உங்கள் பேரன் கூட்டம் போவானோ என்னவோ" என்று நான் பதில் அளித்தேன்.

இப்பதிலை அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை.

"எதற்காகத் தென்னாட்டார் இந்தி படிக்க மாட்டார்கள்? இந்திதான் நாட்டின் பொது மொழியாகி விட்டதே" என்று கேட்டார் ஒருவர், திகைப்புடன்.

"தமிழனுக்கு ஆங்கிலம் எவ்விதம் அந்நிய மொழியோ, அவ்வளவு இந்தியும் அந்நிய மொழி," என்று நான் கூறினேன்.

இதற்குள் மணி அடித்துவிட்டது; நாங்கள் பிரியவேண்டியதிருந்தது.

இந்தப் பிரதேசத்து மக்கள், 'ஏன், தமிழ் நாட்டார் இந்தியை வெறுக்கிறார்கள்,' என்பதை அறிய முயலவேயில்லை.

—(28-9-54 'தமிழ் நாடு' இதழில் எம். எஸ். தரும் தகவல்.)

கழகக் கூட்டம்

சேலூர் (வ. ஆ.)

தி. மு. கழக நிலையம் எதிரில்
2—10—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : வி. இ. சேஷாசலம்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
எஸ். ஏ. வைலகன்

காந்தியார் படத் திறப்பு விழா

2—10—54 மாலை 5 மணிக்கு சேலூர் (வ. ஆ.) ஊராட்சி மன்றத்தில், காந்தியார் உருவப் படத்தை, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைப்பார். அதுசமயம் அவருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

சுகாதாரப் பொருட்காட்சி

1—10—54 மாலை 6½ மணிக்கு சென்னை, மு. தொட்டிக்கலை குமரப்ப முதலி தெருவிலுள்ள இந்து யூனியன் கமிட்டி பாடசாலையில், சுகாதாரப் பொருட்காட்சியை, சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி அவர்கள் திறந்து வைப்பார்.

ரயில் விபத்து

மேலும் தகவல்கள்

சென்ற திங்கட்கிழமையன்று இரவில் ஐதராபாத்—காசிபெட் இடையே நடைபெற்ற கோர ரயில் விபத்தில் மாண்டவர்கள் தொகை திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படவில்லையாயினும், 180 பேர்களாவது இருக்கலாமென யூகிக்கப்படுகிறது.

அந்த வண்டியில் சுமார் 500 பேர் பிரயாணம் செய்தனர் என்ற தகவல் குறிப்பிடத்தக்கது.

மேலும் சுமார் 50 பேருடைய உடல்கள் கண்டெடுக்கப்பட்டன என்றும், பலமான காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 3 பேர் உயிர் துறந்தனரென்றும் செய்திகள் கூறுகின்றன.

இவ்விபத்தில் சிக்கி உயிரிழந்த சுமார் 17 பேருடைய பிரேதங்கள், விபத்து நடந்த இடத்திலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள குண்டரம் என்னும் கிராமத்தினருகில் போலீசாரால் கண்டெடுக்கப்பட்டன என்றும் தெரிகிறது.

நதியின் இருபக்கமுள்ள வாய்க்காலில் சில பிரேதங்கள் மிதந்துகொண்டிருந்தன என்றும் கூறப்படுகிறது.

இன்னும் கண்டெடுக்கப்படாத பிரேதங்களைத் தேட, அவ்விடத்தை ஒத்தி சுமார் 20 மைல் தூரம் வரையிலும், உதவிக் குழுவினர் சென்றிருக்கின்றனர்.

இவ்விபத்து பற்றி, ரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி கூறுகையில், "இந்த விபத்து நடைபெறுவதற்கு சுமார் அரை மணி நேரத்துக்கு முன் வேறொரு வண்டி அந்தப் பாதை வழியே சென்றதாகவும், விபத்துக்குள்ளான வண்டி அந்தப் பாலத்தில் வரவும், பாலத்தின் இரண்டு புறமுமுள்ள இரும்புக் கம்பிகள் சிதைந்ததின் காரணமாக வண்டிகளில் விழுந்தது," என்றும் தெரிவித்திருக்கிறார்.

ரயில்வே அதிகாரிகள் இது பற்றி விடுத்த அறிக்கையொன்றில், சென்னையைச் சேர்ந்த, 'அப்பீல் கமிட்' நீதிபதி அம்பியப்பரும், பிரசிடென்சி கல்லூரி மாணவி 18 வயது மாணவி ஜெ. உபேந்திரநாத்தும், திருநெல்வேலி இந்து கல்லூரி மாணவர் வெங்கடேஸ்வரனும், செகந்தராபாத் மிஷன் கம்பெனித் தொழிலாளர் பெருமாளும் இவ்விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

ராமாயண நாடகத்தில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறார். என்—சமயது நடிகர்களான் கே. ஆர். ராமசாமியும், டி. கே. எஸ். நாடக சபையில் அருமையான வேடம் தாங்கி அழகாக நடித்துவந்தனர்; ஆனால், அவர்கள், இன்று இராமாயண நாடகங்களைப் புதிய முறையில் நடிக்க முற்படுகிறார்கள்.

பழைய, 'இராமாயணம்' எனும் வயதான கிழவி, நவீன சினிமா 'மேக் - அப்'களைக் கொண்டு, 18 வயதுக் குமரியாகக் காட்சி தருவதுபோல், பழைய இராமாயணத்தை நாட்டில் உலா வரச் செய்துகொண்டிருக்கின்றனர்; ஆனால், இராதாவின் இராமாயண நாடகம், 'பழைய இராமாயணம், குமரி அல்ல; கிழவிதான்; அவளை, 'மேக்-அப்' செய்யப்பட்டிருக்கிறாள், குமரிபோல்; அவ்வளவுதான்!' என்று, பழைய இராமாயணம் போட்டிருந்த வேடத்தைக் கலைத்திருக்கிறது என்று சொல்லலாம்.

இங்கே, இந்த நாடகத்தில் வருகிற முனிபுங்கவர்களை : கண்டால் சகிக்கவில்லை என்று எல்லாம் கண்டவர்கள் கூறுகிறார்கள்; ஆனால் நான் சொல்கிறேன்— 'முனிபுங்கவர்கள் காட்டிலே வாழ்பவர்கள்; காட்டை மறந்தவர்கள்; நாகரிக மதியாதவர்கள்; வெயிலிலும், மழையிலும், குளிரிலும், நெருப்பிலும் நின்று தவம் புரிந்தவர்கள்,' என்றெல்லாம் சொல்கிறார்களே; அப்படியானால், அவர்கள், இங்கு காட்டப்படுகிற கோலத்திலேதான் இருக்க முடியுமே தவிர வேறெப்படி இருக்க முடியும்?

இதனால், இப்படி முனிவர்கள் அகோரமாகச் சித்தரிக்கப்படுவதைக் கண்டு பாருக்கேனும் மனத்தாங்கல் இருக்குமானால், அந்த மனத்தாங்கலுக்கு ஒரே மாற்றுதான் உண்டு; அதுதான், 'அவர்கள்' நடத்திக்கொண்டிருக்கிற இராமாயண நாடகங்களை விட்டு விடுவது! அவர்கள் விட்டுவிட்டால், நாங்களும், 'இராமாயணம்' நடிப்பதை விட்டுவிடுவோம்.

எத்தனை துணிவும் நெஞ்சழுத்தமும் இருந்தால், படித்த படிப்பையும், பெற்ற பட்டங்களையும் வகித்த பதவிகளையும் எவ்வளவு மறந்திருந்தால், எவ்வளவு வெட்கத்தை விட்டிருந்தால், ஆச்சாரியார், இராமாயணத்தைத் தூக்கிக்கொண்டு அலைவார் நாடெங்கும்?

இங்கிலாந்தில் உள்ள சர்ச்சிலும், அமெரிக்காவில் உள்ள ஐசனோவரும் பைபிள் புத்தகத்தைக் கையிலேந்தி வைத்துக் கொண்டே ஏசுநாதரின் பெருமையைக் கூறிக்கொண்டா அந்தந்த நாட்டுத் தலைவர்களாக இருக்கிறார்கள்?

மற்றைய நாடுகளில் எல்லாம், மக்களுக்குச் சேவை செய்து தகுதிபெற்றுத் தலைவர்களாகிறார்களேயன்றி ஆண்டவன் பேரைச் உச்சாடனம் செய்து அவன் புகழ் பாடியா தலைவர்களாகின்றனர்! இல்லையே?

இந்த அருமையான பாடத்தைத்தான், ஆச்சாரியார்களுக்கு இராதாவின் இராமாயணம் சொல்லித் தந்துகொண்டிருக்கிறது

ஆம், ஏழு ஆண்டுகட்கு முன், இராமாயணம் பிரியர்கள், இராமாயணத்தைத் தமிழ்மேல் வாரிக் கொட்டிக்கொண்டு ஆடினார்கள்; நாட்டிலே பலமான எதிர்ப்புக் கிளம்பிற்று.

பின் அவர்கள் இறங்கி வந்தனர்—'இராமனை அவதாரமாகவே நம்பக் கூடாது; கடவுளாக வழிபட வேண்டாம்; மாறாக, அதிலே உள்ள கவிதை அழகை ரசியுங்கள், போதும்,'—என்று கூறினார்கள்.

ஆரிய தர்மத்தை வைத்துக்கொண்டுதான் வாழவேண்டும் என்னும் நிலையிலிருப்பவர்கள், இராமாயணத்தை, அதன் கவிதை அழகை, அதனாலே இருக்கும் கவிஞத்தை நீக்கிவிட்டுத் தந்தால் நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

கவிதை அழகு என்ற பெயரில், 'கடவுள் கதை' என்ற கடுவிஷம் கலந்திருந்தால் அதை எப்படி ஏற்றுக்கொள்வது?

ரோம் நாட்டிலே, இன்னும் வேறு பல நாடுகளிலே, இராமனைப் போன்ற கடவுளர்கள் பலரும், இராமாயணம் போன்ற காவியங்கள் பலவும் இருந்தது உண்டு; ஆனால், அவைகள் இன்று இல்லை.

ரோம் நாட்டில் அன்று இருந்த மினர்வா, தார், ஜூபிடர், ஒசைரிஸ் இவைகள், இன்று எங்கே போயின? காங்கிஸ் பொருள் காட்சி விடுகையே, காலதேவனின் கட்டளையால்!

அதே போலத்தான், இன்று இந்த நாட்டிலே உலவுகிற 'இராமன்'கள் ஆகவேண்டும்! அப்படி ஆக்கப்படுவதற்கான முயற்சிதான், இராதாவின் 'இராமாயண' நாடகம்!

'இராதாவின் இராமாயணத்தில் வரும் 'இராமர்' எங்கள் இராமர் அல்ல,'' என்று ராம் மந்திரி சுப்பிரமணியம்!

'அப்படியானால், பழைய இராமாயணத்தில் வரும் இராமரும் எங்கள் இராமர் அல்ல'' மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் — இராமன் என்ற ஒரு பாத்திரம் இருந்ததாகவே அவர்களுக்குத் தெரியவேண்டும்; அதுதான் காலதேவன் வேலை!

"இராமாயணம், நாங்கள் சொல்வது போலத்தான் இருந்தது'' என்று 'அவர்கள்' சொல்கிறார்கள்; ஆனால், நாங்கள் சொல்லவில்லை—'இராமாயணக் கதை எங்கள் நாடகத்தைப்போலத்தான் இருந்தது,'—என்று! ஆனால், 'இப்படியும் இருந்திருக்கலாம்'' என்று கூறுகிறோம்.

இந்த நாடகத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது, இராமன் நல்லவனா? இராவணன் நல்லவனா? சீதை அழகியா, இல்லையா? சீதை கற்புக்கரசியா, காமாந்தகாரியா?' என்பதல்ல; மாறாக 'இந்த இராமாயணத்தை எப்படியும் திருப்பலாம்; திருத்தி அமைக்கலாம்,' என்பதுதான்! ஏன் மகாபாரதத்தைக் கூடத்தான் வேறாக மாற்றியமைத்துவிட முடியும்; ஏனென்றால், அவை யெல்லாம் இட்டுக்கட்டிய கதைகள்! வசனச் சரக்குகள்!

இட்டைப் பாண்டங்களையும் வசனச் சரக்குகளையும் உடைத்து ஒருவகையாகச் செய்துவிட முடியாது;

பழைய இராமாயணம் எனும் வசனச் சரக்கின் நாற்றத்தை எடுத்துக் காட்டுவதுதான் இராதாவின் இராமாயணம்.

இராமனை, 'அவதார புருஷன்' என்று நம்பச் சொல்லுகிறார்கள்.

"இராமன் குதிரையின் ....

பசு வதைத் தடுப்பு - இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம்

உறுப்பினர்களை உள்ளே விடாது சட்டசபை முன்னர் மறியல்!

ஆறு உறுப்பினர்களுக்குக் காயம்!

மேல்சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

லக்னோ, செப். 28—

பசுவதைத் தடுப்பு இயக்கத்தினர் செய்த ஆர்ப்பாட்டம் காரணமாக உத்திரப் பிரதேச சட்டசபை உறுப்பினர்களில் ஆறு பேரும், ஒரு பெண்மணியும் காயமுற்றிருக்கின்றனர் என்று தெரிகிறது.

உ. பி. சட்டசபையின் வேலைகள் இந்த ஆர்ப்பாட்டத்தினால் மிகவும் தடைபட்டது. உ. பி. மேல் சபை உறுப்பினர்களில் நான்கு பேர்தான் சட்டசபை மண்டபத்திற்குள் வர முடிந்ததாகையால் மேல்சபைத் தலைவர் சந்திரபால் சபைக் கூட்டத்தை ஒத்திவைத்து விட்டார்.

பசுவதை எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த 40 தொண்டர்கள், உ. பி. சட்டசபைக் கட்டடத்திற்குச் செல்லும் ஒவ்வொரு வழிகளையும் இன்று காலை மறித்துவிட்டனர். சட்டசபை உறுப்பினர்களையும், சர்க்கார் காரியாலயச் சிப்பந்திகளையும் அவர்கள் உள்ளே அனுமதிக்கவில்லை. உள்ளே செல்ல விரும்பியவர்களில் ஆறுபேர் பெண்கள்.

உள்ளே செல்ல முனைந்தவர்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து மிகுந்த வடிவமான முறையில் கையாண்டனர் என்றும், ஒருவருடைய ஆடை கிழிக்கப்பட்டது என்றும் தெரிகிறது.

பலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டதாம். போலீசார் மிகுந்த கஷ்டத்துடன் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கடந்து சட்டசபை உறுப்பினர்களை உள்ளே அனுப்ப உதவினர் என்றும், மூன்று மணி நேர முயற்சிக்குப் பின்னர், 12-30 மணிக்கு, ஒரு வழியை தங்கள் வசப்படுத்திக்கொண்டு, உறுப்பினர்களை உள்ளே அனுப்பினார்கள் என்றும் தெரிகிறது.

11 மணிவரையில் காத்திருந்த பின்னர் 4 உறுப்பினர்களுக்கு மேல் உள்ளே வர இயலாததால் உ. பி. மேல் சபை மாலை 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

கீழ் சட்ட சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்று உள்ளே நுழைந்துவிட்ட உறுப்பினர்கள் கோரினர். சபைத் தலைவர், இதுபோன்ற நிலைமைக்காக சபை ஒத்திவைக்கப்பட்டால், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு வரக சபை நடைபெற முடியாமல் செய்துவிட்டது என்ற திருப்தி ஏற்படுமென்றும், இது விரும்பத்தக்கது அல்லவென்றும் கூறினார்.

எல்லா உறுப்பினர்களும் உள்ளே வர இயலாததால் கூட்டம் நடைபெறுவது சரியல்ல என்று பலர் ஆட்சேபித்தனர்.

இச்சமயத்தில் எதிர்க் கட்சித் தலைவர் ராஜ் நாராயண், சில உறுப்பினர்களுடன் உள்ளே நுழைந்தார்.

பின்னர் சபை ஏழு நிமிட தாமதத்திற்குப் பின்னர் ஆரம்பமாயிற்று.

ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவர் ஹரிதேவ் சுகாம், அதுமுதல், இதுபோன்ற மறியல் காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறுமென்று குறிப்பிட்டார்.

படையெடுப்புக்கு அறிகுறியா?

பார்மோசாவுக்கு வடக்கே உள்ள மட்சு தொகுதித் தீவுகள் ஒன்றில் கம்யூனிஸ்ட் சீனத் துருப்புகளடங்கிய 40, 50 படகுகள் இறங்க முயற்சித்ததாகவும், சியாங் துருப்புகள் இவர்களை முறியடித்துத் துரத்தியதாகவும் சியாங்-கே-ஷேக் சர்க்கார் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது

இலக்கிய வளர்ச்சித் திட்டம்

13 இந்திய மொழிகளில் 1,181-புத்தகங்கள் போட்டியிடுகின்றன

இந்திய மொழிகளில் எழுதப்பட்டுள்ள சிறந்த நூல்களுக்குப் பரிசளிக்கும் இந்தியத் திட்டத்தின்படி, இந்தி மொழியில் 569 நூல்களும், மராத்தியில் 140-ம், வங்காளியில் 114-ம், தமிழில் 97-ம், கன்னடத்தில் 63-ம், அசாமியில் 34-ம், குஜராத்தியில் 30-ம், மலையாளத்தில் 24-ம், பஞ்சாபியில் 20-ம், உருது 10-ம், ஒரியா 4-ம், மைதிலி 4-ம் ஆக மொத்தம் 1,181 நூல்கள் இந்தியக் கல்வி அமைச்சகத்துக்குக் கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இலக்கிய வளர்ச்சிக்கென்று செய்யப்பட்ட இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மொழியிலும் உள்ள சிறந்த நூல் ஒவ்வொன்றுக்கு 500 பரிசளிப்பதென்று கல்வித் துறையினர் திட்டமிட்டுள்ளார்களாம். பரிசு பெறுவதற்குத் தகுதியுள்ள நூல்களின் பட்டியல், அக்டோபர் மாதம் 2-ம் தேதியன்று அறிவிக்கப்படுமாம்.

பிறப்பு

மோகனூர் தோழர் எம். வி. இராமானுஜம் அவர்களது துணைவியார், தோழியர் இராசலட்சுமிக்கு 22—9—54ல் ஓர் ஆண்மகவு பிறந்தது. இதன் பிறகு 'நம் நாடு' வளர்ச்சிக்கு 2 அன்பளிக்கப்பட்டது — வாழ்வு பெற்றோம் — நன்றியுடையது கொள்ளப்பட்டனர்.

டில்லி விமான கிளப், 1930ல், கராச்சிக்கும் - டில்லிக்கும் இடையே விமானத் தபால் போக்குவரத்து ஒன்றை ஆரம்பித்தபோதே இந்தியாவில் விமானப் போக்குவரத்தின் சரித்திரமும் ஆரம்பமாகிவிட்டது.

இலண்டன் [illegible] [illegible] தொடர்ந்து [illegible] இதழில் [illegible] அச்சகத்தில் [illegible] [illegible] [illegible] [illegible] வெளியிட்டது [illegible] [illegible] [illegible]